மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 18 ம் நாள் வியாழன்கிழமை

*******

திரு.ரெ.செந்தில்குமார், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | வைத்தியலிங்கம் | **அசல் வழக்கு எண்.** | - | **98/2024** |
| த/பெ. | - | குப்புசாமி | **பி.சா.** | - | **1** |
| வயது | - | 60 | | | |
| கிராமம் | - | கண்ணாரம்பட்டு | | | |
| வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் | | | |
| தொழில் | - | விவசாயம் | | | |

**18.06.2026**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. எனக்கு 60 வயது என்றால் நான் 1966 ல் பிறந்திருப்பேன் என்றால் தெரியவில்லை. ராமலிங்கம் என்பவர் என்னை விட 26 வயது மூத்தவர் என்றால் அது எனக்கு தெரியாது. ஆனால் வயது பெரியவர். அவருக்கு தற்போது 86 வயது நடக்கிறது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடன் பிறந்வர்கள் என்னையும் சேர்த்து மொத்தம் 7 நபர்கள் என்றால் சரிதான். அதில் இரண்டு பேர் குழந்தையாக இருக்கும்போது இறந்துவிட்டனர் என்றால் சரிதான். நான்தான் எங்கள் குடும்பத்தில் கடைசிபிள்ளை என்றால் சரிதான்.

2. நான் சின்னப்பிள்ளையாக இருந்தபோது எனது அப்பா இறந்துவிட்டார் என்றால் எனது அப்பா இறந்தது எனக்கு தெரியும். அப்போது எனக்க வயது 7 ஆகும். எனது அப்பாவிற்கும்,அம்மாவிற்கும் எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்றால் எனது அம்மாவிற்கு 10 அடி அகலம், 25 அடி நீளம் உள்ள மனை மற்றும் 50 செண்ட் நிலம் இருந்தது என்று சாட்சி சொல்லிவிட்டு அம்மாவிற்கு 41 செண்ட்ம், அப்பாவிற்கு 50 செண்ட் என்றும் சாட்சி மீண்டும் சொல்கிறார்.

3. மேற்படி எனது அம்மாவிற்கு பாத்தியமான 41 செண்டை எனது அம்மா உயிருடன் இருந்தபோது எனக்கும், ராமலிங்கத்திற்கும் உயில் எழுதிவைத்தார் என்றாலும் அந்த

இடத்தை நானும் எனது அண்ணன் வாதியும் சேர்ந்து கலியபெருமாளுக்கு 1986 ல் ஒரேநாளில் ஒரேபத்திரமாக விற்றுவிட்டோம் என்றால் சரிதான். எனது அப்பா பெயரில் உள்ள 50 செண்ட் நிலத்தை விற்று எனது அக்காக்களுக்கு திருமணம் செய்துவைத்தோம் என்றால் இல்லை. எனது அப்பா இறந்தபிறகுதான் எனது அக்காக்களுக்கு திருமணம் நடந்ததா என்றால் ஆமாம்.

4. எனது அப்பா பெயரில் உள்ள 50 செண்டை எப்போது யாருக்கு விற்றோம் என்றால் கோபால் மகன் நரசிங்கத்திற்கு எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே ரூ.67 க்கு விற்றுவிட்டோம். ஆனால் எப்போது விற்றோம் என்று தெரியவில்லை. வா.சா.ஆ. 1 ஆன வழக்கு சொத்தை போக்கியம் எப்போது வைக்கப்பட்டது என்றால் 1973 ல் வைக்கப்பட்டது.எனது அப்பா சொத்தை மேற்சொன்ன 1973 க்கு முன்னாடி எவ்வளவு நாளுக்கு முன் எனதுஅப்பாவிற்கு பாத்தியமான சொத்து விற்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது.

5. ராமலிங்கம் திருமணத்திற்கு பின்பு தனியாக குடும்பம் நடத்திவந்தார் என்றால் இல்லை. எனக்கு திருமணம் ஆன பின்பும் ஒன்றாகதான் இருந்துவந்தோம். வழக்கு சொத்தில் உள்ள கூரை வீடு எப்போது கட்டப்பட்டது என்றால் எனக்கு திருமணம் நடந்த பிறகு கட்டப்பட்டது. திருமணத்திற்கு முன்பு நாங்கள் அனைவரும் எங்கிருந்தோம் என்றால் எனது அம்மா பெயரில் உள்ள 10X35 இடத்தில் நாங்கள் எல்லோரும் ஒன்றாக இருந்தோம்.

6. கூரைவீட்டை ராமலிங்கம் கட்டினார் என்றால் இல்லை எல்லம் கும்பலாக தான் கட்டினோம். நான் சொல்வது பொய் என்றாலும், ராமலிங்கம்தான் அவரது சொந்த உழைப்பை கொண்டு கட்டி திருமணம் ஆனதிலிருந்து அவர்தான் வசித்து வருகிறார் என்றால் அது பொய். நான் என்னுடைய முதல் விசாரணையில் எனது அம்மாவின் பூர்வீகச் சொத்தையும் விற்று அண்ணன் பெயரில் போக்கியம் பிடிக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

7. என்னுடைய எதிர்வழக்குரையில் எனது அப்பாவின் பெயரில் உள்ள பூர்வீக சொத்தை நாங்கள் அனைவரும் கூலிவேலைக்குச் சென்று வாங்கியதாக சொல்லியுள்ளேன். இதில் எது உண்மையென்றால் எங்கள் அம்மா அப்பா சொத்துக்களை விற்று போக்கியம் பிடித்து வாங்கினோம் என்பது தான்உண்மை. போக்கியம் பிடிப்பதற்கு எவ்வளவு நாள் முன்பு நான் வேலைக்கு போனேன் என்றால் போனேன். போக்கியம் பிடித்தபோது எனக்கு 7 வயது இருக்கும் என்றும் அதனால் நான் வேலைக்கு சென்றிருக்க முடியாது என்றால் அப்படிலாம் இல்லை.

8. 1986 ல்தான் எனது அம்மாவின் சொத்தை கலியபெருமாளுக்கு விற்றதாக ஏற்கனவே ஒத்துக்கொண்ட நிலையில் எனது அம்மாவின் சொத்தை விற்று போக்கியம் பிடித்ததாக சொல்வது பொய் என்றால் இல்லை. 1973 ல் போக்கியம் பிடித்ததும், 1974 ல் அதே சொத்தை கிரையம் பெற்றதும் (வா.சா.ஆ.1, வாசா.ஆ.2) வாதி ராமலிங்கத்தின் சுயசம்பாதியத்தை கொண்டு சுயமாக பெறப்பட்ட கிரையம் என்றால் இல்லை.

9. மேற்படி சொத்தை எப்படியாவது அடையவேண்டும் என்றநோக்கத்தில் பொய்யாக முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனது அப்பாவின் சொத்தை விற்றும் எனது அம்மாவின் சொத்தை விற்றும், நான் கூலி வேலை செய்தும் கிடைத்த பணத்தை கொண்டு வாதி பெயரில் கிரையம் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. நான் தாக்கல் செய்துள்ள அக்ரிமெண்ட் ஆவணத்தில் யாரால் எந்த தேதியில் எந்த இடத்தில் பஞ்சாயத்து பேசியதாக உள்ளது என்றால் எனது பங்காளிவீட்டில் 1993 ல் பேசப்பட்டது. பி.சா.ஆ.1 யை யார் எழுதினார் என்றால் மணி எழுதினார். பி.சா.ஆ.1 ன் அசல் யாரிடம் உள்ளது என்றால் வாதி வசம் உள்ளது. பி.சா.ஆ.1 ஆவணம் எனக்கு கொடுப்பதற்காக எழுதப்பட்டதா என்றால் ஆமாம். அசலை அவரிடம் கொடுத்துவிட்டு எனக்கு ஜெராக்ஸ்தான் கொடுத்தனர்.

11. பி.சா.ஆ.1 ஆவணம் என்ன ஆவணம் என்றால் பாகப்பத்திரம் என்று எழுதினார்கள். பி.சா.ஆ.1 ல் எனது பாகமண்ணு பூர்வீக மனை எனது தாய்வீட்டு மனையை ராமலிங்கம் அடைந்துகொள்ளவேண்டியது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பத்திரம் ஏற்படுவதற்கு முன்பாகவே எனது அப்பா, அம்மா பெயரில் உள்ள சொத்து விற்பனை செய்யப்பட்டது என்றால் எனது அம்மா சொத்தை முழுவதும் விற்கவில்லை. பி.சா.ஆ.1 யை மணி எழுதிக்கொண்டார்.எதனடிப்படையில் அவ்வாறு எழுதினார் என்று எனக்கு தெரியாது.

12. பி.சா.ஆ.1 வாதிக்கு விடப்பட்ட சொத்தின் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் இருக்கிறது. பி.சா.ஆ.1 ல் நெ.2 வைத்தியலிங்கம் கூரைவீட்டு உள்பட அடையப்படவேண்டியது என்ற வாசகம் இடைசொறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பி.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.2000/- பணத்தை கொடுத்தபிறகுதான் பி.சா.ஆ.1 எழுதப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு கொடுத்தது குறித்து அதில் வாசகம் சொல்லப்படவில்லை என்றால் எழுதப்பட்டுள்ளது.

13. இப்படியொரு பஞ்சாயத்துநடக்கவில்லை என்றாலும், இப்படிஒரு பத்திரம் எழுதப்படவில்லை என்றாலும், அந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்து ராமலிங்கத்தின் கையெழுத்து இல்லை என்றாலும் பி.சா.ஆ.1 வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணம்

என்றாலும் சரியல்ல. இந்த பி.சா.ஆ.1 ஆவணம் நகல் என்பதாலும் தகுந்த முத்திரைக்கட்டணம் செலுத்தப்படவில்லை என்பதாலும், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படாததாலும் இந்த ஆவணம் செல்லுபடியாகது என்றால் இதைத்தான் அவர் எழுதிக்கொடுத்தார். பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை நான் பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் மறுபடியும் அதை கேட்டதற்கு அவர் என்னை அடித்துவிட்டார்

14. பி.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமாக வீட்டில் எனக்கு பாகம் உள்ளதாக சொல்லவருகிறேனே என்றால் ஆமாம். பி.சா.ஆ.40 ல் எனக்கும், எதிரிக்கும் பொதுவாக பாகம்பிரியாத சொத்தான வீடும் காலிமனையும் கிடைக்காத வண்ணம் எதிரி தகராறு செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. இரண்டாவது பஞ்சாயத்து பேசியதாக சொல்கிறேனே எப்போது பேசினோம் என்றால் 1995 ஆகும்.

15. காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு முன்பு பஞ்சாயத்து பேசினேனா அல்லது அந்த புகார் கொடுத்த பின்பு பஞ்சாயத்து பேசினேனா என்றால் ஒருவாரம் கழித்து பஞ்சாயத்து பேசினேனா என்றால் புகார் கொடுத்த பிறகுதான் பேசினேன். யார்முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் ஊர்த்தலைவர் முன்னிலையில் பேசப்பட்டது. பி.சா.ஆ.2 ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் எனது அண்ணன்வீட்டில் வைத்து எழுதப்பட்டது.

16. எங்கள்அண்ணன் உள்ள வீடு நான் கட்டிய கூரை வீடு ஆகும். எனது அண்ணன் பெருமாள் கோவில் தெருவில் குடியிருக்கிறார். எனது அண்ணன் குடியிருக்கும் இடம் புறம்போக்கு இடம்தான். நான் குடியிருப்பது மாரியம்மன் கோவில் தெரு, வழக்கு நடப்பது கண்ணாரம்பட்டு - தென்மங்கலம் போகும் ஊரில் புறம்போக்கு இடத்தில் எங்களுக்கு சொந்தமான கூரைவீடு உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் பெருமாள் கோவில் தெருவில் உள்ள வீட்டில் வைத்து எழுதப்பட்டது. நான்தான் திருவெண்ணெய்நல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 3 பத்திரம் வாங்கிகொடுத்தேன். 3 பத்திரங்கள் வாங்கச்சொல்லி யார் சொன்னார்கள் என்றால் நானேதான் வாங்கினேன். இவ்வளவு பத்திரங்கள், இவ்வளவு ரூபாய்க்கு வாங்கச்சொல்லி யார் சொன்னார்கள் என்றால் யாரும் சொல்லவில்லை .

17. எப்போது சென்று பத்திரம் வாங்கிவந்தேன் எப்போது எழுதப்பட்டது என்றால் காலையில் சென்று வாங்கிவந்து கொஞ்சநேரம் கழித்து எழுதப்பட்டது. திருவெண்ணெய்நல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பாகப்பத்திரம் கேட்டு வாங்கினேனா என்றால் ஆமாம். 1993, 1995 பத்திரங்களை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் வாதி உனக்கும் எனக்கும் என்ன பிரச்சனை இனிமேல் சொத்துகிட்ட

வரமாட்டேன் என்று வாய்மொழியாக சொன்னதால் விட்டுவிட்டேன்.

18. சொன்னதேதியில், சொன்ன மாதத்தில், இந்த பத்திரம் எழுதப்படவில்லை என்றாலும், ஏனென்றால் பி.சா.ஆ.10 புகாரினை நான் 16.11.1995 ல் கொடுக்கப்பட்டு அதன் பிறகு ஒரு வாரம் கழித்து பஞ்சாயத்து பேசி பி.சா.ஆ.2 யை எழுதியதாக கூறும் நிலையில் பி.சா.ஆ.2 க்கான முத்திரைத்தாளினை 14.11.1995 வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் முரண்பாடாக உள்ளதால் இந்த பத்திரம் நான் சொன்ன தேதி, சொன்ன மாதத்தில் ஏற்படவில்லை என்றால் இல்லை. புகாருக்கு பிற்பாடுதான் பத்திரம் வாங்கி எழுதப்பட்டது. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

19. பி.சா.ஆ. 2 பத்திரத்தில் பி.சா.ஆ.1 பத்திரத்தை பற்றியோ அதில் குறிப்பிட்ட தொகை பற்றியோ பி.சா.ஆ.2 ல் குறிப்பிடபடவில்லை என்றால் இருக்கிறது. பி.சா.ஆ.2 ல் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் என்றால் சாமிநாதன், ஆசாரி, ஜெயராமன், செல்வராசு ஆகியோர்கள் சாட்சிகையெழுத்துப்போட்டுள்ளனர். மேற்படி நபர்கள் யாரும் உயிருடன் இல்லை . யார் எழுதியது என்றால் பெருமாள் எழுதினார்.

20. பி.சா.ஆ.2 பத்திரத்தில் ரூ.3200/- வாதிக்கு அளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் ரூ.2000/- வாதிக்கு அளிக்கப்பட்ட நிலையில் மீண்டும் எதனடிப்படையில் பி.சா.ஆ.2 ரூ.3200/- நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் பி.சா.ஆ.2 ஏற்பட்ட அன்றைய தினம் ரூ.1200/- வாதிக்கு கொடுத்தேன். பி.சா.ஆ.1 ன் படி கொடுத்த ரூ.2000/- சேர்த்துதான் ரூ.3200/- என எழுதப்பட்டது. இந்த விவரங்கள் அதில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

21. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில், சொன்ன மாதத்தில், சொன்ன வருடத்தில் பி.சா-ஆ.2 ஆவணம் எழுதப்படவில்லை என்றாலும், ஏற்கனவே என்னிடம் உள்ள பத்திரத்தை வைத்து இந்த ஆவணம் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 பத்திரத்திற்கு எவ்வித முத்திரைத்தாளும் இல்லை என்பதாலும், மேற்படி பத்திரம் பதிவு செய்யப்படாத பத்திரம் என்பதாலும் இது சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ல் எனது சகோதரிகள் கையெழுத்துபோடவில்லை என்பதால் அது முழுமைப்பெறாத ஆவணம் என்றால் சரியல்ல.

22. பி.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பம் எனது அண்ணன் ராமலிங்கத்தின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் சர்வே எண்.185/1 ல் கி.மே 10 அடி தெ.வ 35 அடி எனக்கு பாகமாக விடப்பட்டதாக சொல்லியுள்ளேனே அது எந்த வருடத்தில் எனக்கு பாகமாக விடப்பட்டது என்றால் எனக்கு பாகம்ஒதுக்கிய சொத்தில் எனது அண்ணார் இருந்தார். 1995 க்கு பிறகு தாவா சொத்திக்கு நான் வந்தவிட்டேன். சர்வே எண்.185/1 ல் அவர் இருந்தார்.

23. எனது முதல் விசாரணையில் அவர் வசம் மீதமுள்ள சொத்துக்களில் பாகம்தரச்சொல்லிகேட்டேன் என்று சொல்லியுள்ளேன் எந்தச்சொத்துக்களில் அவ்வாறுகேட்டேன் என்றால் எனது அண்ணன் வழக்குச் சொத்துக்களில் உரிமைக்கேட்டதால் எனது அண்ணன் அனுபவித்துவரும் புறம்போக்கு இடத்தில் நான் பாகம்தரும்படி கேட்டேன்.

24. முதல் விசாரணையில் எனது அண்ணன் என்னை கத்தியால் குத்தியதாக சொல்லியுள்ளேன். ஆனால் நான் கொடுத்த புகாரில் பி.சா.ஆ.40 ல் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தால் மனு ரசீது கொடுத்திருப்பார்கள் அவ்வாறு கொடுத்தார்களா என்றால் அதுஎல்லாம் வெள்ளம் வந்ததில் போய்விட்டது- நான் சொல்வது போல் ஒருபுகாரே கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் மனு ரசீது கொடுத்திருப்பார்கள் அவ்வாறு இல்லாததால்தான் வெள்ளம் வந்து அடித்து சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

25. பி.சா.ஆ.40 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ராவுத்தருக்கு கொடுத்த நிலம் ராமலிங்கத்திற்கு பாத்தியமானது என்றும், அந்த கிரையப்பத்திரத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல . வழக்கு சொத்தின் சர்வே எண்.197 ஆகும். அதன் உட்பிரிவு தெரியாது. பி.சா.ஆ.7 சர்வே எண்.322 க்கு போட்டுள்ள புல வரைபடம் எதற்குபோட்டுள்ளேன் என்றால் எனது வக்கீலைக்கேட்டால்தான் தெரியும்.

26. பி.சா.ஆ.9 முதல் பி.சா.ஆ.11 எதற்காக போட்டுள்ளேன் என்றால் எனக்கு தேவையான சொத்தை கொடுக்கவில்லை. பட்டா அவர் பெயரில் வாங்கி அவர் கொடுத்துவிட்டார். அந்த இடத்தில் நானும், வாதியும் சேர்ந்து அனுபவித்து வந்து முழுவிஸ்தீரணத்தையும் வாதியிடம் கொடுத்துவிட்டு அதற்கு பதிலாக 3 செண்ட் எனக்கும், மீதி 3 செண்டுக்கு வாதியிடம் பணமாக ரூ.3200/- கொடுக்கப்பட்டது என்றுதான் நான் கட்சியாடுகிறேன். மேற்படி விவரத்தை எனது எதிர்வழக்குரையிலும், முதல்விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

27. பி.சா.ஆ.9 முதல் பி.சா.ஆ.11 வரையிலுள்ள ஆவணங்கள் இந்த வழக்கு சொத்திற்கு சம்மந்தப்படாவை என்றும், அது வாதிக்கு பாத்தியமான சொத்து என்றால் அவர் எந்தவிதத்தில் சம்பாதித்தார்கள் என்று சாட்சி கேட்கிறார். பி.சா.ஆ.12 முதல் 20, ஆகிய வீட்டுவரி ரசீதுகள் வேறு வேறு கதவிலக்கம்போட்டுள்ளதால் இந்த வழக்கிற்கு சம்ந்தம் இல்லை என்றால் சரியல்ல.

28. தென்மங்கலம் கிராமத்தில் குடியிருக்கும் வீட்டிற்கான வீட்டு வரிரிசீதுகளை நான்

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 முதல் பி.சா.ஆ.6 ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலரிடம் வாங்கப்பட்டது என்றால் அது சட்டப்படி ஆவணமாக கருதமுடியாது என்றாலும் வட்டாட்சியரிடம் இருந்து பெற்றுதான் தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் அதற்கு ஏன் VAO வை அங்குப்போட்டுள்ளனர் என சாட்சி கேட்கிறார் அந்த ஆவணங்கள் வழக்கிற்கு பிற்பாடு ஏற்பட்டவை என்றாலும் அவை செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

29. பி.சா.ஆ.8 ஆவணமும் ஜெராக்ஸ்தான் என்றால் ஒரிஜினல்தான். பி.சா.ஆ.8 ஆவணம் நகல் என்றால் சரியல்ல. அதனால் இந்த ஆவணம் வழக்கில் சட்டப்படி ஏற்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. யார் பெயரில் இருந்தபட்டாவை எதன் அடிப்படையில் என் பெயருக்கு மாற்றினேன் என்றால் பி.சா.ஆ.1, 2 ஆவணத்தின் அடிப்படையில் ராமலிங்கம் எழுதிக்கொடுத்தார் அதனடிப்படையில் மாற்றினேன்.

30. பி.சா.ஆ.1, 2 ஆவணம் செல்லதக்கதல்ல என்பதால் பி.சா.ஆ.8 ஆவணமும் செல்லத்தக்கதல்ல என்றால் நான் கொடுத்த பணத்தையும் இல்லை என்று சொல்லுங்களே என்று சாட்சி கேட்கிறார். 1993, 1995 ல் எவ்வித ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றாலும், எந்தவித பஞ்சாயத்தும் பேசவில்லை என்றாலும், தாக்கல் செய்த ஆவணங்கள்ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் வாதி பணத்தை பெற்றுக்கொண்டதும் இல்லை நான் கொடுக்கவும் இல்லை என்றால் பணத்தை வாங்கிக்கொண்டு இல்லை என்று சொன்னால் எப்படி என்று சாட்சி கேட்கிறார்.

31. எனக்கு சட்டப்படி உரிமையில்லாத ஆவணத்தைக்கொண்டு வழக்குச் சொத்தில் உரிமையுள்ளதாக சொல்வது சட்டப்படி தவறு என்றால் நான் எழுதினேன் செல்லும் நான்கொடுத்ததெல்லாம் பொய்யாகுமா என சாட்சி கேட்கிறார். 1973 ல் போக்கியம் போட்டு 1975 ல் அவருடைய சொந்தவருமானத்தை வைத்து வாங்கப்பட்டது அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் நான் எனது உழைப்பைபோட்டுதான் வாங்கினேன். அவர் சுற்றி சுற்றிதான் வந்தார். அந்த பத்திரம் எழுதப்படும்போது 1973 ல் எனக்கு 7 வயதுதான் என்றாலும் அதனால் நான் சம்பாதித்துகொடுத்து வா.சா-ஆ.1, 2 வாங்கியிருக்கமுடியாது என்றால் நான் 7 வயது இருக்கும்போது எனது அப்பாஇறந்துவிட்டார் .இந்த நிலையில் வா.சா.ஆ 1, 2 எழுதும்போது எனக்கு 7 வயது எப்படி இருக்கும் என்று சாட்சி கேட்கிறார்.

32. ராமலிங்கம் கிரையம் வாங்கி அனுபவித்து வந்தநிலையில் நான் சிறிது காலம் அனுமதிக்கேட்டதன் பேரில் அவர் அனுமதியளித்திருந்தார் என்றும் அதனை சாதகமாக பயன்படுத்தி தற்போது அங்கேயே குடியிருக்கிறேன்.அந்த சொத்தை வாதிக்கு திரும்ப கொடுக்கவேண்டும் என்றால் நான் குடியிருக்கசொல்லிகேட்கவில்லை எனக்கு சொந்தமானது என்ற அடிப்படையில் கேட்கிறேன்.

33. பி.சா.ஆ.1, 2, 4, முதல் 8, 40 ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடிய ஆவணங்கள் இல்லை என்றாலும், இதர ஆவணங்கள் வழககுச்சொத்துக்கு சம்மந்தப்பட்ட வணங்கள் இல்லை என்றாலும் அதைப்பொறுத்து வழக்கு சொத்தில் உரிமைகோர எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றாலும், வா.சா.ஆ.1, 2 அடிப்படையில் வாதிக்கு மட்டுமே வழக்கு ஏ பட்டியல் சொத்தின் முழுவிஸ்தீரணமும் வாதிக்கு உரிமையானது என்றாலும் வழக்கு பி பட்டியல் சொத்தில் வாதியின் அனுமதியின் பேரில் நான் குடியிருந்து வந்தேன் என்றாலும் அதனைத்தற்போது காலிசெய்து வாதி வசம் ஒப்படைக்கவேண்டும் என்றாலும் இல்லை. அப்படியெல்லாம் ஒப்படைக்கமுடியாது.

34. வாதிபோட்டுள்ள வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் இல்லை. எப்படி நான் சொல்வது பொய் அவர் சொல்வது மெய் என்கிறீர்கள் என்று சாட்சி கேட்கிறார். நான் தாக்கல் செய்த ஆவணங்கள் சட்டப்படி முத்திரைத்தாளுடன் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படாத ஆவணம் என்றாலும் வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 , 2 ஆவணங்கள் சட்டப்படிசார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டது என்பதால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் என்றால் எனக்கு ஏற்படுத்திய ஆவணம் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் ஏற்பட்டது. அவ்வாறு எந்த பஞ்சாயத்தும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the Plaintiff/Defendant pleader and admitted by the witness to be correct.

Digitally signed by SENTHILKUMAR
Date: 2026.06.18 15:57:33 +0530

D.M-cum-JM.
T.V.Nallur.